**செய்தி வெளியீடு எண் : 322** **நாள்: 05.03.2022**

செய்தி வெளியீடு

மாண்புமிகு குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் இன்று (5.03.2022) சென்னை, கிண்டி, சிட்கோ கூட்டமைப்பு அலுவலகக் கட்டிடத்தில் பல்வேறு திட்டங்களுக்கான செயல்முறை துவக்கத்திற்காக நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்களுக்கு புதிய வாகனங்களை வழங்கியும், கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கியும், மாவட்ட தொழில் மைய உதவி பொறியாளர்களுக்கு ஏற்றுமதி சார்ந்த பயிற்சிகான சான்றிதழ்களை வழங்கியும், சென்னை மாவட்ட, தொழில் வளர்ச்சி, எதிர்கால தொழில் முன்னேற்றம் குறித்து தகவல் விளக்க நூலினை வெளியிட்டும், UYEGP மற்றும் NEEDS திட்டங்களுக்கான இணைய வழி மூலம் புத்தாக்கம் சார்ந்த பயிற்சி திட்டங்களை துவக்கியும் வைத்து உள்ளார்கள்.மேலும் மாண்புமிகு குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் முன்னிலையில் தொழில் வணிகத் துறையுடன் மும்பை பங்குச்சந்தை புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

மாண்புமிகு குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தெரிவிக்கையில் மாவட்ட தொழில் மையங்கள் தொழில் நிறுவனங்களுக்கான சேவைகளை விரைந்து வழங்க ஏதுவாக கரூர் , திண்டுக்கல், திருவண்ணாமலை, தேனி, நீலகிரி, புதுக்கோட்டை மாவட்ட தொழில் மையங்களுக்கும், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்களான செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, தென்காசி மற்றும் மண்டல இணை இயக்குநர் சென்னை அலுவலகத்திற்கும் என 12 புதிய வாகனங்கள் ரூ99.41 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டு இன்றைய தினம் வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழகத்தின் ஏற்றுமதியை 100 மில்லியன் டாலராக உயர்த்த, தமிழகத்தில் தயாரிக்கப்பட்ட பொருட்கள் உலகில் எங்கும் கிடைப்பதை அரசு நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் உறுதி செய்ய வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் மாவட்ட தொழில் மையங்களின் 34 உதவி பொறியாளர்களுக்கு (ஏற்றுமதி வசதியாளர்கள்) ஏற்றுமதி நடைமுறை கொள்கைகள், விருப்ப நடைமுறை மற்றும் பல்வேறு ஏற்றுமதி ஊக்குவிப்பு கவுன்சில்களின் திட்டங்கள் குறித்த தகவல்களை மண்டல கூடுதல் DGFT அலுவலகம் மூலம் விரிவான பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியை வெற்றிகரமாக முடித்த ஏற்றுமதி வசதியாளர்களுக்கு இன்றைய தினம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

தொழில் முனைவோர் மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் மூலம் வேலையில்லா இளைஞர்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் மேம்பாட்டு திட்டம் (NEEDS) மற்றும் புத்தாக்கம் சார்ந்த பயிற்சி திட்டங்கள் ரூபாய் 1 கோடி மதிப்பில் இணைய மயமாக்கப்படும் என சட்டமன்ற கூட்டத்தொடரில் அறிவித்திருந்தேன். அதனடிப்படையில் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் பயிற்சிகளை இணைய வழி மூலம் எப்பொழுது வேண்டுமானாலும் கண்டு கற்கும் வகையில் பயிற்சி திட்டங்கள் இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மும்பை பங்குச்சந்தை ( Mumbai stock Exchange) தமிழ்நாடு அரசுடன் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று எனது முன்னிலையில் கையெழுத்தானது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் பி.எஸ்.சி, எஸ்.எம்.இ வலைதளத்தில், குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பட்டியலிடுவதற்கான வழிமுறைகள், பட்டியலிடுவதன் நன்மைகள் மற்றும் அளவுகோல்கள் குறித்து, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும். தமிழ்நாட்டின் எஸ். எம் . இ கள் , பி.எஸ்.சி, எஸ்.எம்.இ தளத்தை தங்கள் வளர்ச்சிக்காக ஈக்விட்டி நிதி திரட்டவும், தங்கள் நிறுவனங்களின் மதிப்பை கூட்டவும் பயன்படுத்தும். இது மாநிலத்தின் வேலை வாய்ப்பு மற்றும் வளர்ச்சிக்கு மேலும் உயர்த்தும். இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் தொழில் நுட்பம் சார்ந்த பயிற்சிகளை தமிழக அரசின் மாவட்ட தொழில் மைய அலுவலர்களுக்கு மும்பை பங்குச்சந்தை வழங்கும்.

தொழில் வணிக துறையில் பணியாற்றி பணிக்காலத்தில் உயிர் இழந்த 4 அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு இளநிலை உதவியாளர்களாக கருணை அடிப்படையில் பணியமர்த்துவதற்கான பணி நியமன ஆணைகள் 4 நபர்களுக்கு வழங்கப்பட்டது. சென்னை மாவட்ட, தொழில் வளர்ச்சி, எதிர்கால தொழில் முன்னேற்றம் குறித்து தகவல் விளக்க நூல் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அரசு செயலாளர் திரு.வி.அருண்ராய் இ.ஆ.ப., தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன் இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**